



# ஆனந்தம் தரும் ஆனி மாதம்

**ஆனி மாதம் அப்படி என்ன சிறப்பு?**

உத்திராயணப் புண்ணிய காலத்தின் கடைசி மாதம் தான் ஆனி மாதமாகும். இது தேவர்களின் மாலைப் பொழுது என்கிறது சாஸ்திரம். மேலும், ஆனி மாதம் இளவேனிற்காலம். கோடையின் தாக்கம் நீங்கி இதமான காற்று வீசும். இம்மாதத்தில் பல முக்கியமான நிகழ்வுகள் நடந்துள்ளதாக புராணங்கள் கூறுகின்றன.

ஆனி மாதம், உத்திரம் நட்சத்திரத்தன்று மாலை வேளையில் சிவாலயங்களில் நடராஜப் பெருமானுக்கு திருமஞ்சனம் நடைபெறும்.

அதேபோன்று வைணவத் திருத்தலங்களில் முதன்மையான ஸ்ரீரங்கம் திருத்தலத்தில் கேட்டை நட்சத்திரத்தில் திருமஞ்சனம் எனப்படும் ஜேஷ்டாபிஷேகம் நடைபெறும்.

சில கோவில்களில் ஆனி பௌர்ணமி அன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெறுவதைக் காணலாம். அந்த வகையில் திருச்சி உறையூரில் மேற்கூரை இல்லாமல் (விமானம்) திறந்தவெளி கொண்ட கருவறையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வெக்காளி அம்மனுக்கு அன்று மாம்பழங்களால் அபிஷேகம் நடைபெறும்.

அமாவாசை திதி, தர்ப்பணம் தர இயலாதவர்கள் உங்கள் வீட்டிலேயே முன்னோர்களை வழிபட்டு எள் கலந்த சாதத்தை காகங்களுக்கு உணவாக வைப்பதால் முன்னோர்களுக்கு திதி அளித்த பலன் உண்டாகும்.

### திருஷ்டி கழியுங்கள் :

ஆனி அமாவாசை தினத்தில் திருஷ்டி பூசணிக்காய் அல்லது எலுமிச்சை பழத்தின் மீது கற்பூரம் ஏற்றி உங்கள் தொழில், வியாபார இடங்களை திருஷ்டி கழித்து அதற்குரிய பூசணிக்காயை உடைத்தும், எலுமிச்சை பழத்தை நசுக்கியும் திருஷ்டி கழித்திட வேண்டும்.

### குலதெய்வ வழிபாடு அவசியம் :

ஆனி அமாவாசை திருவாதிரை நட்சத்திரத்துடன் இணைந்து வருவதால் இந்த நாளில் குலதெய்வ கோயிலுக்கு சென்று வழிபட்டு வர நன்மைகள் நடைபெறும். எதிர்மறை எண்ணங்கள் நீங்கி மனதில் நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கும்.







## ஆனி உத்திர தரிசனம்

### ஆனி உத்திர தரிசனம்.. சிவாலயம் சென்று அபிஷேகத்திற்கு இந்த பொருட்களை வாங்கி கொடுங்கள்..!!

அக்னி நட்சத்திரம் முடிந்தாலும், ஆனி மாதத்தில் வெப்பம் அதிகமாக இருக்கும். இந்த காலகட்டத்தில், சிதம்பரத்தில் உள்ள நடராஜ பெருமானுக்கு திருமஞ்சன

நட்சத்திரம் என்று பெயர். இந்த நட்சத்திரத்திற்கு உரிய தேவதை இந்திரன். தலைமை பொறுப்பினை தக்க வைத்து கொள்ளவும், தலைமை பொறுப்பினை நிர்வகிக்கின்ற திறனை புதுப்பித்து கொள்ளவும், இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாகவும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபடுகின்ற நாள், இந்த ஆனி மாதத்தில் வருகின்ற கேட்டை நட்சத்திர நாள் ஆகும்.

## ஆனி மூலம் நட்சத்திரம் :

ஆனி மாதத்தில் மூலம் நட்சத்திரம் வரும் நாள் பொதுவாக பௌர்ணமியோடு இணைந்து வரும். பௌர்ணமியில் பிறக்கும் குழந்தைகள் அரசாளும் யோகத்தினை பெற்றிருப்பர். அதனால் தான் ஆனி மூலம் அரசாளும் என்ற பழமொழி தோன்றியது.



## ஆனி மாதத்தில் பிறந்தவர்களின் குணங்கள் !

ஆனி மாதத்தில் பிறந்தவர்கள் மிகுந்த புத்திசாலிகள். மிகுந்த பொறுமைசாலிகள். மிகுந்த நகைச்சுவை உணர்வு கொண்டவர்கள். சிந்திக்கும் ஆற்றல் அதிகம் கொண்டிருப்பர். வாழ்வில் முன்னேற துடிப்பவர்கள். மனைவி குழந்தைகள் மீது அதிகம் பாசமாக இருப்பார்கள். மற்றவர்களை மயக்கும் வகையில் பேசுவார்கள். ஞாபக சக்தி அதிகம் கொண்டவர்கள். அடிக்கடி தாம் எடுக்கும் முடிவுகளை மாற்றிக்கொண்டே இருப்பர். சந்தேகப்படும் குணம் கொண்டவர்கள்.

# ஆனி மாத சுபமுகூர்த்த தினங்கள்

(சுபமுகூர்த்த நாட்கள் திருக்கணித பஞ்சாங்கத்தில் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளது)

### கடன் வாங்க உகந்த நாள்

ஆனி 02 16.06.2025 திங்கள்
ஆனி 18 02.07.2025 புதன்
ஆனி 23 07.07.2025 திங்கள்
ஆனி 30 14.07.2025 திங்கள்

### புதிய வாகனம் ஏற உகந்த தினம்

ஆனி 02 16.06.2025 திங்கள்
ஆனி 23 07.07.2025 திங்கள்
ஆனி 26 10.07.2025 வியாழன்

### போர் போட உகந்த தினம்

ஆனி 23 07.07.2025 திங்கள்
ஆனி 32 16.07.2025 புதன்

### கடன் அடைக்க உகந்த நாட்கள்

ஆனி 05 19.06.2025 வியாழன்
ஆனி 07 21.06.2025 சனி
ஆனி 10 24.06.2025 செவ்வாய்
ஆனி 17 01.07.2025 செவ்வாய்
ஆனி 20 04.07.2025 வெள்ளி
ஆனி 21 05.07.2025 சனி
ஆனி 23 07.07.2025 திங்கள்
ஆனி 28 12.07.2025 சனி
ஆனி 30 14.07.2025 திங்கள்

### சுதர்சன ஹோமம் செய்வதற்கு உகந்த நாட்கள்

ஆனி 02 16.06.2025 திங்கள்
ஆனி 07 21.06.2025 சனி
ஆனி 21 05.07.2025 சனி
ஆனி 23 07.07.2025 திங்கள்

# ஆனி மாத ராசிபலன்



## விடாப்பிடியாக செயல்படும் மேஷ ராசி அன்பர்களே..!!



சூரியன் 03ல் இருப்பதால் உத்தியோக பணிகளில் முக்கியத்துவம் அதிகரிக்கும். சுப முயற்சிகள் கைகூடி வரும். புதிய வருமான வாய்ப்புகள் சாதகமாக அமையும்.

செவ்வாய் 05ல் இருப்பதால் பழைய பிரச்சனைகளால் மனவருத்தங்கள் நேரிடும். எதிர்காலம் சார்ந்த சிந்தனைகள் மேம்படும்.

புதன் 03ல் இருப்பதால் குடும்பத்துடன் சுற்றுலா சென்று வருவீர்கள்.

ஆனி 08 முதல் புதன் 04ல் இருப்பதால் புதிய விஷயங்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் வேண்டும்.

சுக்கிரன் ராசியில் இருப்பதால் மனதில் இருந்துவந்த குழப்பங்கள் குறையும். வீட்டின் தேவைகளை அறிந்து நிறைவேற்றி வைப்பீர்கள்.

ஆனி 15 முதல் சுக்கிரன் 02ல் இருப்பதால் கலகலப்பான பேச்சுக்கள் மூலம் அறிமுகங்கள் ஏற்படும். புது விதமான ஆடை ஆபரண சேர்க்கை தொடர்பான எண்ணங்கள் அதிகரிக்கும்.

குரு 03ல் இருப்பதால் முயற்சிகளில் இருந்துவந்த தடைகளை புரிந்து கொள்வீர்கள்.

சனி 11ல் இருப்பதால் விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

ராகு 11ல் இருப்பதால் மனதில் புதுவிதமான கற்பனைகள் அதிகரிக்கும்.

கேது 05ல் இருப்பதால் எதிர்பார்த்து இருந்துவந்த தன வரவுகள் சாதகமாக அமையும்.

**வழிபாடு**:மாரியம்மன் வழிபாடு செய்து வர நெருக்கடியாக இருந்துவந்த பிரச்சனைகள் விலகும்



# நிதானமாக செயல்பட்டு வெற்றி வாய்ப்புகளை உருவாக்கும் மகர ராசி அன்பர்களே..!!

சூரியன் 06ல் இருப்பதால் பேச்சுக்களில் பொறுமை வேண்டும். வழக்குகளில் நுணுக்கமான விஷயங்களை புரிந்து கொள்வீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் மாற்றமான வாய்ப்புகள் ஏற்படும்.



செவ்வாய் 08ல் இருப்பதால் பணி நிமித்தமான மாற்றங்களில் சிந்தித்துச் செயல்படவும். பொருளாதாரம் ஏற்ற, இறக்கமாக இருக்கும்.

புதன் 06ல் இருப்பதால் எதிர்பாராத சில உதவிகள் கிடைக்கும்.

ஆனி 09 முதல் புதன் 07ல் இருப்பதால் விவாதங்களில் எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்கும். உயர் அதிகாரிகள் இடத்தில் மதிப்புகள் மேம்படும்.

சுக்கிரன் 04ல் இருப்பதால் வெளியூர் பணிகளில் மகிழ்ச்சியான செய்திகள் கிடைக்கும். பேச்சு வன்மையால் காரிய அனுகூலம் உண்டாகும்.

ஆனி 15 முதல் சுக்கிரன் 05ல் இருப்பதால் வருமானத்தை மேம்படுத்துவது தொடர்பான எண்ணங்கள் அதிகரிக்கும். கவின் கலைகள் மீதான ஆர்வம் உண்டாகும்.

குரு 06ல் இருப்பதால் பூர்வீக சொத்துக்கள் மூலம் ஆதாயம் உண்டாகும்.

சனி 02ல் இருப்பதால் குடும்பத்தில் புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும்.

ராகு 02ல் இருப்பதால் புதிய மொழிகள் மீதான ஆர்வம் அதிகரிக்கும்.

கேது 08ல் இருப்பதால் மற்றவர்களுடன் பயனற்ற வாதங்களை தவிர்க்கவும்.

**வழிபாடு**: சிவபெருமானை வழிபட எண்ணம் ஈடேறும்..



# சாணக்கியத்தனமாக செயல்படும் கும்ப ராசி அன்பர்களே. . !!

சூரியன் 05ல் இருப்பதால் சாமர்த்தியமான செயல்பாடுகள் மூலம் கீர்த்தி உண்டாகும். நினைத்த காரியம் ஈடேறும். எதிராக இருந்தவர்கள் கூட ஆதரவாக இருப்பார்கள்.



செவ்வாய் 07ல் இருப்பதால் வர்த்தகப் பணிகளில் லாபம் உண்டாகும். தவறிப்போன சில வாய்ப்புகள் கிடைக்கும்.

புதன் 05ல் இருப்பதால் எதிலும் சிக்கனமாக செயல்படுவீர்கள்.

ஆனி 09முதல் புதன் 06ல் இருப்பதால் முக்கிய முடிவுகளில் நிதானம் வேண்டும். தனம் தொடர்பான நெருக்கடிகள் குறையும்.

சுக்கிரன் 03ல் இருப்பதால் திட்டமிட்ட சில காரியம் எண்ணிய விதத்தில் நிறைவேறும். புதிய தொழில்நுட்பம் சார்ந்த தேடல்கள் அதிகரிக்கும்.

ஆனி 15 முதல் சுக்கிரன் 04ல் இருப்பதால் தாய் வழியில் அனுசரித்து செல்லவும். வாகன மாற்றம் சார்ந்த உதவிகள் சாதகமாகும்.

குரு 05ல் இருப்பதால் நீண்ட நாள் பிரார்த்தனைகள் நிறைவேறும்.

சனி ராசியில் இருப்பதால் குடும்ப விஷயங்களை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்வதை குறைத்துக்கொள்ளவும்.

ராகு ராசியில் இருப்பதால் தற்பெருமை சார்ந்த சிந்தனைகளை குறைத்து கொள்ளவும்.

கேது 07ல் இருப்பதால் பலதரப்பட்ட மக்களின் அறிமுகம் கிடைக்கும்.

**வழிபாடு**:ராமரை வழிபட தொழில் விருத்தி உண்டாகும்.